தொடர் இல: யு.ீனு – 01

| பதிவு இல. : |
| --- |

மதகுரு ∴ திரு ∴ திருமதி …………………………………………………….

1. விடுதி வசதி பெற்றுக்கொள்ளல்

மேலே தரப்பட்டுள்ள விடயத்திற்கேற்ப 2021/22 கல்வியாண்டிற்கு விடுதி வசதி பெற்றுக் கொள்ளவதற்காக தரப்பட்டுள்ள விண்ணப்பத்தின் படி ……………………….. திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு விடுதி வசதி வழங்க நீங்கள் பேராதனைப் பல்கலைக்கழக ………………………………………………….. விடுதிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறேன். அதன் படி அன்றைய தினம் மு.ப. 9.00மணிதொடக்கம் பி.ப. 6.00 மணிவரையிலான காலப் பகுதியில் மேற் குறிப்பிட்ட விடுதியின் உப விடுதிக்காப்பாளரிடம் விடுதிவசதியைப் பெற்றுக் கொள்ளுமாறு அறியத் தருகிறேன்.

- விடுதிக்கு வர முன்னர் அண்மைக் காலத்தில் நீங்கள் தொற்று நோயொன்றிற்குள்ளாகி இருப்பின் அல்லது தொற்று நோயாளி ஒருவருடன் தொடர்பாயிருந்திருப்பின் உங்களிடமிருந்து அந்நோய் பரவாது என்பதை ஏற்றுக் கொள்ளப்பட்ட வைத்தியர் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட வைத்திய சான்றிதழ் ஒன்றினை பல்கலைக்கழக பிரதான வைத்திய அதிகாரியிடம் கையளிக்க வேண்டும்.
- விடுதிக் கட்டணம் :-

  நீங்கள் தங்குமிடத்தைப் பெறுவதற்கு முன்னர் உரிய விடுதிக் கட்டணத்தை (ஒரு கல்வி ஆண்டுக்கான கட்டணமாக ரூ 750/= மற்றும் ஒரு பருவத்திற்கான விடுதிக் கட்டணமாக ரூ 375/=) மக்கள் வங்கி, பேராதனை, கணக்கு இலக்கம் 057100121338023 இற்கு அல்லது இலங்கை வங்கி, பேராதனை, கணக்கு இலக்கம் 0001273343 இற்கு வரவு வைத்தல் வேண்டும். இவ்வாறு வரவு வைக்கப்பட்ட பற்றுச்சீட்டினை உப விடுதிக் காப்பாளரிடம் கையளித்தால் மட்டுமே தங்களுக்கான தங்குமிட வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- வதிவிடத்தில் தங்க வரும் போது கொண்டு வர வேண்டிய பொருட்கள்
  - வெள்ளைநிற பீங்கான் ஒன்று, வெள்ளை நிற கோப்பை ஒன்று, நீர் அருந்தும் குவளை ஒன்று, தலையணை ஒன்று, தலையணை உறை ஒன்று, கட்டில் விரிப்பு, பூட்டு திறப்பு(தேவையெனின்), கொண்டு வர வேண்டும்.
- விடுதி வசதி பெற்றுத் தரல் தொடர்பாக வழங்கப்பட்ட கடிதத்தின் முதலாம் பக்கத்தின் மேலே வலது மேல் மூலையில் காட்டப்பட்டுள்ள உங்களது பதிவு இலக்கத்தை அலுவலகத்துடனான கடிதத் தொடர்புகளுக்கும் பணம் செலுத்தும் பற்றுச் சீட்டுகளிலும் குறிப்பிட வேண்டும்.

2. விடுதியை மீளக் கையளித்தல்

- விடுதி வசதி வழங்கப்பட்டு ஒரு வார (விடுமுறை தினங்கள உட்பட 7நாட்கள்) காலத்திறகுள் தமக்குரிய விடுதி வசதியைப் பெற்றுக் கொள்ளவில்லை எனில் முன்னறிவித்தல் எதுவுமின்றி அவ்வசதி இரத்துச் செய்யப்படும்.
- தமது விருப்பத்திற்கேற்ப விடுதியை மாற்றுவதற்கோ வேறு ஒரு நபருக்கு வழங்குவதற்கோ எந்த ஒரு மாணவருக்கும் உரிமை இல்லை.
- விடுதியை விட்டு விலகுவதாயின் ஒரு வாரத்திற்கு முன் விடுதிக்காப்பாளருக்கூடாக பணிப்பாளர் (விடுதி வசதி) இற்கு அறிவிக்க வேண்டும்.அவ்வாறான சந்தர்ப்பத்தில் எக்காரணம் கொண்டும் அக் கல்வியாண்டில் எஞ்சியுள்ள காலப் பகுதிக்கு அவ் விடுதியிலோ வேறு ஏதேனுமொரு விடுதியிலோ வதிவிட வசதி வழங்கப்பட மாட்டாது.
- விடுதிக்காப்பாளரினது அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரியொருவரினது பூரண அனுமதியின்றி எந்தவொரு விருந்தினருக்கோ அல்லது வேறோரு மாணவருக்கோ தமது அறைகளில் தங்க இடமளித்தல் முழுமையபக தடுக்கப்பட்டுள்ளது.
- பல்கலைக்கழகத்தினூடாக அறிவிக்கப்படும் போது மாணவர்கள் தமது விடுதிகளில் இருந்து கட்டாயமாக வெளியேற வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அல்லது கல்வி ஆண்டொன்றின் இறுதியில் விடுதியில் இருந்து வெளியேறும் போது மாணவர்கள் தமக்கு கையளிக்கப்பட்ட உபகரணங்கள், அறைத் திறப்பு போன்றவற்றை உரிய முறையில் கையளிக்க வேண்டும். குறித்த தினத்தில் அவ்வாறு கையளிக்கத் தவறுமிடத்து தண்டப்பணம் செலுத்த வேண்டிய தேவை ஏற்படும்.மேலும் ஏதாவது ஒரு பொருளுக்கு மாணவர்களால் சேதமேற்படுத்தப் படின் அதற்காக மதிப்பிடப்பட்டுள்ள பணம் அறவிடப்படும். சேதமேற்படுத்தப்பட்ட பொருட்களுக்கான தண்டப்பணம் 3.5 இல் தரப்பட்டுள்ள படி அறவிடப்படும்.
- அறைக்கான மேலதிக திறப்பு வார்த்தல் செய்யக் கூடாது. அதே போல் கதவிற்கான பூட்டு மாற்றப்பட்டிருந்தால் அதற்கான தண்டனையாக தண்டப்பணம் அறவிடப்படும்.

3. விடுதி தொடர்பான அடிப்படை சட்டதிட்டங்கள்

விடுதி நிர்வாகம், விடுதி ஒழுக்கம் தொடர்பான சட்ட திட்டங்களை மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும். இந்த சட்ட திட்டங்களை அறியாமலிருப்பது குற்றமாகும். விடுதி ஒழுக்கம் , நிர்வாகம் சம்பந்தமாக முழுப் பொறுப்பும் விடுதிக்காப்பாளருக்கே என்பதுடன், விடுதிக்காப்பாளர் இல்லாதவிடத்து பூரணகால விடுதிக்காப்பாளரின் ஆலோசணையையும் கட்டளைகளையும் மாணவர்கள் ஏற்று நடப்பது கட்டாயமாகும்.

3.1. விடுதி ஒழுக்கம் :-

- சகல வதிவாளர்களும் சகல சந்தர்ப்பங்களிலும் தம்மிடம் மாணவ அடையாள அட்டையை அல்லது பதிவுப் புத்தகத்தை வைத்திருத்தல் கட்டாயமாகும். அதே போல் அவசியமேற்படும் போது விடுதிக்காப்பாளர், உப விடுதிக்காப்பாளர், அல்லது வேறு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவர் கேட்கும் சந்தர்ப்பத்தில் வழங்க வேண்டும்.
- எந்த ஒரு மாணவரும் மதுபாணம் அல்லது வேறு ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய போதைப்பொருள் ஒன்றினை விடுதிக்குஅல்லது அதன் எல்லைக்கு கொண்ட வரக் கூடாது. விடுதிக்கு கொண்டு வரக் கூடாது.விடுதியினுள் குடிக்கக் கூடாது. வைத்திருத்தல் கூடாது. அதே போல் வெளியில் மது அல்லத போதைப் பொருள் பாவனையின் பின் விடுதிக்குள் வரக் கூடாது.
- இரவு10.00 மணியின் பின் விடுதி வளவில் அமைதி காக்க வேண்டும். மாணவர்களிற்கிடையில் நடைபெறும் பாடக் கலந்தாலோசனைகளால் ஏனைய

மாணவர்களிற்கு இடைஞ்சலோ கஸ்டமோ ஏற்படாத வண்ணம் பாாத்துக் கொள்ள வேண்டும்.

➢ அறையில் பாவிக்கும் கேட்கும்கருவியின் (வானொலிப் பெட்டி போன்ற) சத்தத்தை மட்டுப்படுத்த வேண்டும்.

➢ பல்கலைக்கழக மாணவர்களாக அவர்களதும் பல்கலைக்கழகங்களினதும் கௌரவத்தை பாதுகாக்கும் படியாக விடுதியிலும் வெளியிலும் ஆடைகளை அணிய வேண்டும்.

➢ மாணவர் சேவைக் கிளையில் பதிவு செய்யப்படாத எந்த ஒரு சங்கத்தினதும் கூட்டங்களை விடுதியினுள் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது. அதே போல் விடுதிக்காப்பாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொண்ட எழுத்து மூல அனுமதியின்றி எந்தவொரு சங்கத்தையும் உருவாக்க முடியாது.

➢ அறையினுள் சமைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

➢ விடுதி அறிவித்தல் பலகை 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இல. சட்டத்தின் துணைவிதி 26 ஆம் பந்தியின் படி கையாள வேண்டும்.

➢ விடுதி அறைகளில் யன்னல்களினூடாக கழிவுப் பொருட்களை வெளியே எறிதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

## 3.2 விடுதி உபகரணங்களினதும் மின் பொருட்களினதும் பாவனை

- ➢ விடுதியின் பொது இடங்களிலும் , அறையினுள்ளும் காணப்படும் மரத் தளபாடங்களுக்கும் ஏனைய உபகரணங்களுக்கும் சேதம் விளைவித்தலாகாது.
- ➢ விடுதியின் பொது இடங்களிலும் , அறையினுள்ளும் காணப்படும் தளபாடங்களையும் அனுமதியின்றி எடுத்துச் செல்லல் அல்லது இடமாற்றம் செய்யக் கூடாது.
- ➢ தமக்குரிய மின் உபகரணததைப் பாவிக்கும் போது விடுதிக்காப்பாளர் அல்லது அவரால் பெயர் குறிக்கப்பட்ட அதிகாரியிடமாவது அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலதிக மின் உபகரணங்கள் பாவனைக்காக பல்கலைக்கழக அதிகாரிகளால் தீர்மானிக்கப்படும் மேலதிக கட்டணத்தை செலுத்த வேண்டும்.
- ➢ அறைகளில் நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ள மின் உபகரணங்களையும், மின் ஆழிகள் (ிடரப ரூ ளறவைஉா) கழட்டவோ மாற்றவோ கூடாது. அது தொடர்பானபிரச்சினைகள் காணப்படின் விடுதி நிர்வாகத்தினரிடம் தெரிவிக்கவும். தேவைக்கேற்ப எடெப்டர் நுஒவநளெழைெ உழனந பாவிக்க முடியும்.

## 3.3 சிற்றுண்டிச்சாலை

➢ ஆண்களுக்கான விடுதி சிற்றுண்டிச்சாலைகள் காலை 6.30 தொடக்கம் இரவு 11.00 வரை திறந்துவைக்கப்படுவதுடன் பெண்களுக்கான விடுதி சிற்றுண்டிச்சாலைகள் காலை 6.00 தொடக்கம் இரவு 10.00 வரை திறந்துவைக்கப்படும். தேநீரானது மதிய, இரவு உணவு வேளையில் வழங்கப்படமாட்டாது என்பதுடன்,

காலைச் சாப்பாடு மு.ப. 6.30 – 8.30 இற் இடையில்

பகல் சாப்பாடு மு.ப. 11.30 – 1.30 இற் இடையில்

இரவுச் சாப்பாடு பி.ப. 6.30 – 9.00 இற் (ஆண்களுக்கான விடுதி சிற்றுண்டிச்சாலைகளில்)இடையில் பெற்றுக் கொடுக்கப்படும், பெண்களுக்கான விடுதி சிற்றுண்டிச்சாலைகள் பி.ப. 5.30 – 9.00 இடையில் பெற்றுக் கொடுக்கப்படும்

- ➢ சிற்றுண்டிச்சாலைக்குரிய பீங்கான், குவளை, கோப்பை தட்டை அறைகளுக்கு எடுத்துச் செல்லக் கூடாது. அவ்வாறு செய்தால் தண்டப் பணம் அறவிடப்படும்.

3.4 விடுதியை விட்டு வெளியேறல்

- விடுதிக்காப்பாளர் அல்லது உப விடுதிகாப்பாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட அனுமதிப் பத்திரம் மாணவர்கள் மு.ப. 6.00 இக்கு முன் விடுதியிலிருந்துவெளியேற முடியாது. அதே போல் சகல மாணவர்களும் இரவு 7.30 இற்கு முன் விடுதிக்கு திரும்பி வர வேண்டும். ( எனினும் சகல முதலாம் வருட மாணவர்களும் மு.ப. 7.00 இற்கு முன் விடுதியிலிருந்து வெளியேறக் கூடாது என்பதுடன் பி.ப. 6.00 இக்கு தமக்குரிய விடுதிகளுக்கு வர வேண்டும்.
- விடுதிக்காப்பாளர் அல்லது உரிய வேறு அதிகாரியொருவரிடம் அனுமதி பெற்றுக் கொள்ளாமல் ஒரு நாள் அல்லது அதற்கு கூடிய காலம் விடுதியிலிருந்து வெளியேறக் கூடாது. உங்களுக்கு விடுதியிலிருந்து வெளியேற வேண்டுமாயின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைகளை அனுசரித்து நடக்கவும்
  - (அ) வார இறுதி விடுமுறை விடுதிக்காப்பாளர்
  - (ஆ) கல்வி நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடியதாக 07 நாட்களிற்கு உட்பட்ட காலப் பகுதிக்கு எனின் விடுதிக்காப்பாளரினூடாக தமக்குறிய பீடாதிபதிக்கு
  - (இ) 07 நாட்களுக்கு கூடிய காலம் எனின் விடுதிக்காப்பாளரினூடாக தமக்குரிய பீடாதிபதிக்கூடாக உபவேந்தரிடமிருந்தும், விடுமுறை பெற்றுக் கொள்ள வேண்டும்.

**3.5** விடுதிக்கட்டணம் மற்றும் விடுதிக்குரிய சொத்துக்களுக்கு விளைவிக்கும் சேதங்களுக்கான தண்டப்பணம் :-

பேராதனைப்பல்கலைக்கழக நிதிக் குழுவின் தீர்மானங்களுக்கமைய விடுதிக்கட்டணம் மற்றும் விடுதிக்குரிய சொத்துக்களுக்கு விளைவிக்கும் சேதங்களுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தண்டப்பணம் அறவிடப்படும்.

**i.** பிந்திய கொடுப்பனவு

- கல்வியாண்டொன்றுக்காக விடுதி வசதியைப் பெற்றுக்கொள்ள 750/- ரூபாய் கட்டணமும், பருவமொன்றுக்காக விடுதி வசதியைப் பெற்றுக்கொள்ள 375/- ரூபா கட்டணமும், கல்வி நடவடிக்கைகளுக்காக விடுமுறைக் காலங்களில் 02 வாரங்களுக்கு அதிகமான காலம் விடுதியில் தங்கியிருக்க 375/- ரூபா கட்டணமும் செலுத்தப்பட வேண்டும். விடுதி வசதி பெற்றுக்கொண்டு 02 வாரங்களுக்குப் பின்பும் விடுதிக் கட்டணம் செலுத்தவில்லை எனின் உரிய கட்டணத்துடன் அக்கட்டணத்திற்குச் சமனான கட்டணம் பிந்திய (தாமத) கட்டணமாக அறவிடப்படும்.
- கல்வியாண்டு முடிவடையம் வரையிலும் உரிய விடுதிக் கட்டணம் செலுத்தாத மாணவர்களுக்கு மீண்டும் விடுதி வசதியைப் பெற்றுக்கொள்ளும் உரிமை ரத்துச் செய்யப்படும்.
- குறிப்பிடப்பட்ட தினத்திற்கு அறைத் திறப்பையும் அறைக்குரிய பொருட்களையும் சட்ட பூர்வமாகக் கையளிக்காத மாணவர்களுக்கு 3000/- ரூபா பிந்திய கட்டணமாக அறவிப்படும்.

**ii.** சேதத்துக்கான தண்டப்பணம்

- வீட்டு உபகரணங்களின் முழுமையான சேதத்திற்கு உபகரணத்தின் பெறுமதி + பெறுமதியின் 25 % (சேவைக் கட்டணம்) அறவிடப்படும்.
- வீட்டு உபகரணங்களின் பகுதியான சேதத்திற்கு சேதத்தினை மதிப்பீடு செய்து தண்டப் பணம் விதிக்கப்படும்.

- மெத்தையொன்றின் முழுமையான சேதத்திற்கு மெத்தையின் பெறுமதி + பெறுமதியின் 25 % (சேவைக் கட்டணம்) அறவிடப்படும்.
- மெத்தையொன்றின் பகுதியான சேதத்திற்கு சேதத்தினை மதிப்பீடு செய்து தண்டப் பணம் விதிக்கப்படும்.
- மின் உபகரணங்களின் சேதத்தின் போது மின் உபகரணங்களின் பெறுமதி + பெறுமதியின் 25 % (சேவைக் கட்டணம்) அறவிடப்படும்.
- விளையாட்டு உபகரணங்களின் சேதத்தின் போது விளையாட்டு உபகரணத்தின் பெறுமதி + பெறுமதியின் 25 % (சேவைக் கட்டணம்) அறவிடப்படும்.
- யன்னல் கதவுகளுக்கு சேதம் விளைவிக்கப்படுமிடத்து சேதத்தை மதிப்பிட்டு தண்டப்பணம் அறவிடப்படும்.

**ii.i** கீழே குறிப்பிடப்பட்டுள்ள சேதங்களுக்கு பணிப் பொறியியலாளரினால் முழு நேர விடுதிக் காப்பாளரின் ஊடாக நிர்ணயிக்கப்பட்ட தண்டப் பணம் அறவிடப்படும்.

- யன்னல் கதவுகளுக்கு மற்றும் வீட்டு உபகரணங்களுக்கு 1000/- ரூபா இற்கு அதிகமான சேதத்தை ஏற்படுத்தல் மற்றும்,
- அறையின் உள்ளும் புறமும் சுவர் மற்றும் அதில் பொருத்தப்பட்டுள்ள உபகரணங்களுக்கு சேதத்தை ஏற்படுத்தல்.

**iii.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயல்களுக்காக முழு நேர விடுதிக்காப்பாளரினால் விடுதிக்காப்பாளரின் உடன்பாட்டுடன் கட்டணம் அறவிடப்படும்.

- அறையை அசுத்தமாக வைத்திருத்தல்
- விடுதிச் சூழலினுள் செய்யும் ஒழுக்கக் குறைவான செயற்பாடுகள்

அதேபோல், சகல தண்டப் பணமும் அறையில் இருக்கும் மாணவர்களிடையே சமமாக பிரிக்கப்படும் அதேவேளை தனித்தனியாக ஏற்படுத்தும் சேதத்திற்கு உரிய மாணவரிடம் தண்டப்பணம் தனியாக அறவிடப்படும்.

**3.6**. பகிடிவதை :-

- எந்த ஒரு வகையிலும் பகிடிவதை தடுக்கப்பட்டுள்ளதுடன் , புதிய மாணவர்களுக்கு தொல்லை கொடுப்பதற்காக ஒன்றுசேர்தல் அல்லது அதற்கு ஒத்துழைப்பதைத் தவிர்க்குமாறு மாணவர்களாகிய நீங்கள் கடுமையாக எச்சரிக்கப்படுகிறீர்கள். எந்தவொரு செயல் நடைமுறையிலுள்ள நாட்டுச் சட்டத்தில் குற்றமென கருதப்படுகிறதோ அவ்வாறு கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.அதனடிப்படையில்

i. எந்தவொருமாணவருக்கோ அல்லது பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கோ (ஆளணி உறுப்பினருக்கோ)பகிடிவதை செய்தல் ,பாலியல் துஂ'பிரயோகம் அல்லது பாரதூரமான காயங்களை ஏற்படுத்தும் யாராவதொருவர்.

ii. கல்வி நிறுவனமொன்றில் எனின் மாணவர் ஒருவரை அல்லது பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவரைமிரட்டும் நோக்குடன் அல்லது மிரட்டப்பட்ட ஆளிற்கு சட்டத்தில் இல்லாத ஒரு செயலைச் செய்யுமாறு அல்லது அவருக்கு செய்ய உரிமையுள்ள ஒரு செயலை செய்ய விடாது தடுத்தல் அல்லது மிரட்டப்பட்ட ஆளிற்கு பலவந்தப்படுத்தும் நோக்குடன் அக் கல்வி நிறுவனத்தினுள் அல்லது வெளியில்பணியாட்டொகுதி உறுப்பினரின் உடலுக்கு , நற்பெயருக்கு , சொத்துக்களுக்கு தீங்கு

விளைவிக்கபடும் என வாய் மூலம் அல்லது கடிதம் மூலம் மிரட்டும் எந்தவொரு நபரும்.

iii. எந்தவொரு கல்வி நிறுவனத்தினுள்ளும் அல்லது அந்தக் கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவ, நிர்வாகத்தின் கீழான ஏதாவது ஒரு சூழலினுள் சட்டபூர்வமான நேர்மைக்கு பங்கம் விளைவிக்காத, ஏதாவது விசேட செயலை நடைமுறைப்படுத்த அக் கல்வி நிறுவனத்தினுள் எந்த ஒரு மாணவருக்கோ அல்லது வேறு ஒருவருக்குக்கட்டாயப்படுத்தியதற்காகவோ, அம் மாணவரின் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரின் அல்லது வேறொருவரினதோ சுதந்திரத்திற்கும் போக்குவரத்து சுதந்திரத்தை இடைஞ்சலுண்டாக்கும் விதமான செயலொன்றைச் செய்யும் எந்வொரு நபரும்

iv. கல்வி நிறுவனமொன்றில் எந்தவொரு மாணவராவதுஅல்லதுபணியாட்டொகுதி உறுப்பினரொருவரின் குறித்த சில சுற்றுவட்ட எல்லைகளுக்குள் செல்வதை தடை செய்யக் கூடியவாறான அத்தகைய முறையில் மாணவரை அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரை சட்ட விரோதமாக மறித்த வைக்கின்ற எவரேனும் ஆளொருவர்

v. கல்வி நிறுவனம் ஒன்றின் அல்லது அதன் முகாமைத்துவத்தின் அல்லது நிர்வாகத்தின் கீழ் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள எவையேனும் வளவுகளை சட்டபூர்வமான காரணமின்றி , பலவந்ததமாக இருப்பாட்சி கொள்ளும் ஒருவர்.

vi. கல்வி நிறுவனம் ஒன்றின் அல்லது அதன் முகாமைத்துவத்தின் அல்லது நிர்வாகத்தின் கீழ் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் ஆதனம் தொடர்பில் சொத்தழிவு செய்கின்ற எவரேனும் ஒருவர்

1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இல. , கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடை செய்யும் சட்டத்தின் கீழ் ஆளொருவர் தவறொன்றுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து,பிணை வழங்க முடியாத மட்டத்தில் குற்றமொன்றாவதுடன் 2 வருடம் முதல் 20 வருடம் வரை சிறைத் தண்டணை வழங்க முடியும். அதே போல் நிறுவனத்திலிருந்து வெளியேற்ற முடியுமென்பதுடன் பாதிக்கப்பட்டவருக்கு உடல் ரீதியான அல்லது சொத்திழப்பு ஏற்பட்டிருப்பின் அதற்கான குற்றப்பணம் செலுத்தவேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளிற்கு அப்பால் பல்கலைக்கழகத்தால் விடுதி வசதியும் அத்தனுடன் தொடர்பான காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் சட்டதிட்டங்களிற்கு கீழ்ப்படிந்து நடக்கவும் முறையான ஒழுக்கத்துடன் நடந்துகொள்ளவும் சகல மாணவர்களும் வகை செய்ய வேண்டும். இந்நிபந்தனைகளையும் ஒழுக்கச் சட்டத்தை மீறின் வதிவிட வசதி ரத்துச் செய்யப்படுவதோடு வேறும் தவறொன்றுக்கு தண்டனை பெற வேண்டியேட்படும்.

மேலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்திட்கும் நிபந்தனைகளிற்கும் கீழ்படிந்து விடுதிவசதி பெற நீங்கள் விரும்பின் , அதற்காக இத்துடன் அனுப்பப்பட்டுள்ள பிரகடனத்தை சரியான முறையில் பூர்த்தி செய்து உங்களது புகைப்படப் பிரதியொன்றை வேறாக்கியுள்ள சதுரத்தினுள் ஒட்டி, கையொப்பமிட்டு உங்களது விடுதிக்காப்பாளரிடம் கையளித்து விடுதிவசதி பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கிறேன்.